உ
சிவமயம்
திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம்

## திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான
திருவீழிமிழலை

## அருள்தரு சுந்தரகுசாம்பிகை உடனாய
## அருள்மிகு வீழிநாதசுவாமி திருக்கோயில்

# திருப்பணி கைங்கர்ய பத்திரிக்கை

திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக் கரையிலாக் கருணைமா கடலை
மற்றவரறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புறங்கள் செற்ற எஞ்சிவனைத் திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங் குளிரஎன் கண்குளிர்ந்த தனவே.
-சேந்தனார்.

தேவாரம்

வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே
காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழும் மொழிகளே.
-திருஞானசம்பந்தர்.

*சிவபுண்ணியச் சீலர்களே !*

பொன்னி நதி வளங்கொழிக்கும் தென்தமிழ்நாட்டில் இறை அருள் சுரக்கும் திருத்தலங்கள் பல உள. அவற்றுள் சக்கராயுதம் பெற வேண்டி மகாவிஷ்ணு ஆயிரம் தாமரை மலர்களால் பஞ்சாட்சர சகஸ்ரநாம அர்ச்சனை செய்து சக்ராயுதம் பெற்றதும், இறைவன் தன் கரங்களில் வைத்திருக்கும் மழு, எறி, மான் போன்றவைகள் இல்லாமல் மனித ரூபமாகவே காத்தியாயினி என்ற நாமாவளியுடன் உள்ள உமை அம்மையைத் திருமணம் புரிந்து நித்தம் மணவாளக் கோலமாகவே இருக்கும் தலமும், இரதிதேவி வேண்ட மன்மதனை உயிர்ப்பித்தத் தலமும், சுவேத கேது என்ற சிவபக்தருக்காகக் காலால் யமனை உதைத்தத் தலமும், பத்திரவல்லி என்ற அரசிக்கு முயலகன் நோயை நீக்கிய தலமும், சம்பந்தர், அப்பர் ஆகிய சமயக் குரவர்களின் தமிழிசை கேட்கும் ஆவலால் நித்தம் படிக்காசு கொடுத்தத் தலமும், சுந்தரர் தேவாரம் பாடிய அருணகிரியார் திருப்புகழ் பாடிய தலமும் சேந்தனார், காலமேகப்புலவர் ஆகியோர் பாடி அருள் பெற்ற அற்புதத் தலமும் இத்திருவீழிமிழலையே ஆகும். இறைவன் வீழியழகன், அம்மை சுந்தர குசாம்பிகை, விநாயகர் – படிக்காசு விநாயகர், முன்னை விநாயகர், திருவிழா மூர்த்தி – கல்யாணசுந்தரர் என்கிற மாப்பிள்ளை சுவாமி.

இத்தகையப் பல சிறப்புகள் வாய்ந்த வீழிநாதசுவாமி திருக்கோயிலின் திருப்பணி எல்லாம் வல்ல ஆடல்வல்லானின் திருவருளை சிந்தித்து திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் இருபத்து நான்காவது **குரு மகா சன்னிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ அம்பலவாண தேசிக** பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாணையின் வண்ணம் அருள்மிகு வீழிநாத சுவாமி நற்பணி மன்றம் சார்பாக திருப்பணி நடைபெறுகின்றது. இத்திருப்பணியில் இறையன்பர்கள் பெரிதும் பங்கு கொண்டு தங்களால் ஆன நன்கொடைகளை பணமாகவோ, பொருளாகவோ கீழ்க்காணும் முகவரிகளுக்கு அனுப்பி வைத்து சிவப்புண்ணியத்தில் பங்குபெற அன்புடன் வேண்டுகிறோம்.

மற்ற விபரங்கட்கு :

**அருள்மிகு வீழிநாதர் நற்பணி மன்றம்,** *திருவீழிமிழலை* **- 609 505.**

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி எண் : **09520100016867**

திரு. **ஆர். வசந்தகுமார்,** வேந்தர், கற்பகம் பல்கலைக்கழகம், கோவை மற்றும் மன்றத் தலைவர்.

திரு. **ஆர். ராமகிருஷ்ணன்,** கண்காணிப்பாளர், அருள்மிகு வீழிநாதசுவாமி திருக்கோயில், மன்ற பொருளாளர். செல் : 94439 24825

திரு. **ஆறுமுகசாமி,** தூத்துக்குடி.

திரு. **ஆர். வேணுகோபால்,** நிறுவாக இயக்குநர். சேவரைட் சேமியா லிமிடெட், திண்டுக்கல், சென்னை.

திரு. **ஏ. எம்ஜெ. பழனியப்பன்,** திருநள்ளார் கொம்யூன் பஞ்சாயத்து, காரைக்கால்.

திரு. **காமகோடி ஐய்யர்,** விஷ்ணுபுரம்.

திரு. **பி. அருண் குமார்,** ஜௌபட் அசோசியேட், சென்னை.

திரு. **கொத்தமங்கலம் நகரத்தார்,** வகையறாக்கள்.

திரு. **ஜி. கார்த்திகேயன்,** மன்ற செயலாளர், திருவீழிமிழலை, செல் : 94439 73629

திரு. **சிவமணி ஜோதிடர்,** கோவை.

*பொதுக்குழு உறுப்பினர்கள் :*

திரு. **வி. நடராஜன்,** ஆசிரியர் (ஓய்வு), அக்ரஹாரம்.

திரு. **பி. சாமிநாதன்,** ஊ.ம.து.தலைவர்.

திரு. **ஆர். ஜெயராமன், H.S.(Rtd.)** திருவீழிமிழலை.

திரு. **து. சுப்பிரமணியன்,** வடக்கு வீதி.

திரு. **ஏ. ரவி,** திருவீழிமிழலை.

திரு. **செல்வராசு,** அதம்பாவூர்.